# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.545/2018

Deposition of Lw1 Examined as Pw1 Dt. 13.07.2026

| | |
|---|---|
| Name | திருஞானசம்பந்தம் |
| Father Name | செல்லக்கண்ணு |
| Village Name | பூதங்குடி |
| Age | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day13.07.26.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 21.08.2017 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நான் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்த போது எங்கள் தெருவில் உள்ள பசங்க எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் கட்டுவதற்காக பூஜை போடுவதற்காக அனைவரிடமும் சொல்லவேண்டும் என்பதற்காக சென்றார்கள். அப்போது வீரமணி என்பவர் வீட்டில் இருந்துகொண்டு என்னிடம் ஏன்டா சொல்லவரீங்க என்று குச்சிக்காரி மகனே, தேவுடியா மகனே, என்று அசிங்மாக திட்டினார். கலியமூர்த்தி அரிவாள் எடுத்துக்கொண்டு வந்தார். அந்த அரிவாளை வரதராஜன் பிடுங்கி என்னை தலையில் முன்பக்க மண்டையில் வெட்டினார். வீரமணி அவர் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் எனது வலது பக்க தோள்பட்டையில் அடித்தார்.

வரதராஜன் எங்களை இனிமேல் உன்னை கொன்றுவிடுவேன் என்று சொல்லி கொலைமிரட்டல் விட்டார். தீபன்ராஜ், பிருத்திவிராஜ், செல்வக்குமார் , தியாகராஜன், சந்தனவேல் என்பவர்கள் சம்பவஇடத்தில் இருந்தார்கள். அவர்கள் என்னை இரண்டு சக்கர வாகனத்தில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தாகள். நான் சிகிச்சையில் இருக்கும் பொழுதுதான் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **எனது கையெழுத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

S. திருஞானசம்பந்தம்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி
யின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு அவரால் சரியெனஒப்புக்கொண்டு
ஏற்கப்பட்டது

17/7/26

நீதித்துறை நடுவர் எண்
மயிலாடுதுறை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.545/2018

Deposition of Lw3 Examined as Pw2 Dt. 13.07.2026

| | |
|---|---|
| Name | தியாகராஜன் |
| Father Name | மணி |
| Village Name | பூதங்குடி |
| Age | 28/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day13.07.26.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை தெரியும். கடந்த 21.08.2017 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நான் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்த போது எங்கள் தெருவில் உள்ள பசங்க எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் கட்டுவதற்காக பூஜை போடுவதற்காக வீடுவீடாக ராஜேஸ், செல்வக்குமார், தீபன்ராஜ், முத்தமிழ், பிருத்திவிராஜ், சந்தனவேல் மற்றும் நான் சொல்லசென்றோம்.

அப்போது வீரமணி என்பவர் வீட்டில் சொல்ல சென்றோம். நான் சாமி கும்பிடுவதில்லை என் வீட்டிறக்கு ஏன்டா சொல்லவரீங்க என்று குச்சிக்காரி மகனே, தேவுடியா மகனே, என்று அசிங்மாக திட்டினார். அப்பொழுது அங்கு உள்ள பசங்களுக்கும் வீரமணிக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தபோது அப்போது அ.சா. 1 அங்கு வந்து என்னடா பிரச்சனை என்று கேட்டதற்கு அப்போது வரதாரஜன் அ.சா.1 யைப் பார்த்து உன்னைத்தான்டா எதிர்பார்த்தேன் என்று குச்சிக்காரி மகனே என்று திட்டி வரதராஜன் அரிவாளைால் அ.சா.1 ன் முன்பக்க மண்டையில் வெட்டி விட்டார்.

அவரை அங்கிருந்த பசங்க இரண்டு சக்கர வாகனத்தில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

M. தியாகராஜன்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

13/7/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.545/2018

Deposition of Lw7 Examined as Pw3 Dt. 13.07.2026

| | |
|---|---|
| Name | சங்கர் |
| Father Name | மணி |
| Village Name | பூதங்குடி |
| Age | 35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day13.07.26.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **(அது அ.த.சா. ஆ. −2 ஆகும். )** 22.ம் தேதி 08 வது மாதம் வருடம் ஞாபகம் இல்லை. அன்று வீரமணி வீட்டு வசாலில் மதியம் 2.00 மணியளவில் மணல்மேடு போலிசார் சம்பவ இடம் வந்து விசாரித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் சந்தனவேல் என்பவரும் கையொப்பம் இட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

Mசங்கர்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின முன்னிலையில சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

13/7/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.